மே 2012
MAY 2012
6 - 1
VASANTHAM
Tamil Monthly
مجلة الربيع   ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

மாத இதழ்
The Spring

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

கவித்தூறல்கள்



அன்னையே..!
நீயே..!!



கல்வி
சிறப்பிதழ்..!

## ஆரம்ப கல்வி ஏன் அசத்துவதில்லை..?

இலவச வெளியீடு

பர்தாவின் உன்னதம்



பதின்பருவத்தின் கவுரவம்..!

جمعية النجاة الخيرية
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

VASANTHAM - May 2012 New.indd 1    5/24/12 10:56:41 AM

# பகைமை பாராட்டாதீர்கள்..!
# பொறாமை பொசுக்குங்கள்..!!



இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது. அல்லாஹ்வுக்கு அஞ்சிச் செயலாற்றுங்கள். நீங்கள் செய்வனவற்றை முழுமையாக அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான்..! (திருக் குர்ஆன் 5:8)

VASANTHAM - May 2012 New.indd 2 5/24/12 10:56:42 AM

# வசந்தம்

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
MAY 2012 மே 2012
மலர் 6 இதழ் 1



Chief Patron
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

General Supervisor
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

Editor
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

Editorial Board
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

Initial Lay-out
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Belal
நாதிர் பிலால்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency

PUBLISHER
வெளியீடு
IPC
ISLAM PRESENTATION COMMITTEE



CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97266683, 97848068
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com
SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook
twitter
www.twitter/vasantham2k
YouTube
Scribd.






பக்கம் 15
பக்கம் 4
பக்கம் 17


அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்




15 கவித்தூறல்கள்
பேகம் பானு

2 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

3 தலையங்கம்
ஆசிரியரிடமிருந்து..!

8 சிறப்புக் கட்டுரை
அருணை வினோத்

10 IPC வழித்தடங்கள்
அப்துல்லாஹ்

11 கல்வி
அட்டவணை

13 தொடர்ச்சி
அகார் முஹம்மத்

14 தொடர்ச்சி
முஹம்மத் உஸைர்

16 மழலையர் சோலை
சவுந்தர்யம்

18 தொடர்ச்சி
மு.அ. அப்துல் முஸவ்விர்

20 அறிவுப் போட்டி!


*பெற்ற பாரத்தை*
*இறக்கிவைத்தாலும்*
*சுமந்து கொண்டுதான்*
*இருக்கின்றாள் இன்றும்..!*




4 முகப்புக் கட்டுரை
மு.அ.அப்துல் முஸவ்விர்


## ஆரம்பக்கல்வி ஏன் அசத்துவதில்லை..?

*மனிதனை அறியாமை*
*மயக்கத்திலிருந்து விடுவித்து,*
*அறிவு நிதர்சனத்துள் புக*
*வைப்பது கல்வி..!*


17 விருந்தினர் பக்கம்
லைலா அஸ்கர்




بريد الربيع - كلمة العدد - العلوم-هل العلم لكسب الدنيا-جهود المسلمين في نهضة الهند - الظلم على النساء وحله في ضوء الإسلام - تجربة حجاب الطالبات في الجامعات الأوربية - والدة ( نشيد ) - صفحة الأطفال - أخبار العالم - مسابقة

# புதியவன் நான்..! எனக்கு உதவி வசந்தம்தான்..!



வசந்தம் ஏப்ரல் 2012 இதழ் கண்டேன்!சுதந்தர இந்தியாவின் கலவரங்களின் தொகுப்பும்,அதற்கான தீர்வுகளையும் அக்கு வேறு ஆணிவேராக விளக்கப்படுத்தியது எமக்கு பல செய்திகளை உணர்த்தியது.இந்திய இறையாண்மை மேலோங்க கலவரங்களின் களவானிகள் களையெடுக்கப்பட வேண்டும் என்பதே வசந்தத்துடன் சேர்ந்து எமது பிரார்த்தனை..!

அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா - குவைத்

வசந்தத்தின் மிக சமீபத்திய வாசகன் நான்!புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய பின்னர், நவீன உலகின் வளர்ச்சிகளுக்கு ஏற்றார்போல், இஸ்லாமிய விஷயங்களை மிக அழகாகவும்,உலகியல் நடப்புக்களையும் .., ஒட்டுமொத்தமாகக் கூறினால் வாழ்வின் அனைத்துத் துறை தழுவிய ஆக்கபூர்வ விஷயங்களை அறிந்துகொள்ள வசந்தம் எனக்கு மிக்க துணையாக இருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.வசந்தம் மேலும் வளர ஏகஇறைவனை இறைஞ்சுகின்றேன்!

ஜேம்ஸ் (எ) ஷம்ஷூ த்தீன்
கோவை - தமிழகம்
ரிக்கய் - குவைத்

கொள்ளுங்கள் மனைவியரே, இறைவனிடம் கையேந்துங்கள், எம்மை உடனே உங்களுடன் சேர்க்க சொல்லி..!

N. முஹம்மத் ஃபாரீஸ்
திருவாரூர் - தமிழ்நாடு
சால்மியா - குவைத்

ஒளிப்படமாக தந்ததும் ஆச்சர்யப்படத்தக்க ஒன்று.மகளிர் மீதான வன்னொடுமைகள் தீர வசந்தம் தரும் தீர்வுகளை அறிய அடுத்தடுத்த இதழ்களுக்காகக் காத்திருக்கின்றேன்!

அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா - குவைத்

வசந்தம் மார்ச் 2012 இதழ் கண்டேன்! உணர்வுகளின் பிரதிபலிப்புக்களாய் தலையங்கமும் கவித்தூறல்களும் அமைந்தன. வசந்தம் நடத்தும் பாடங்களை ஒரு மாணாக்கனின் நிலையில் இருந்து கற்கின்றேன்.

இராமச்சந்திரன்
தொழுதூர் - திருச்சி
ஃபர்வானியா - குவைத்

வசந்தம் தந்த மகளிர் சிறப்பிதழ் பல அரிய செய்திகளைத் தந்தது.குறிப்பாக கண்ணிய ஆடை குறித்த இளவேனில் கட்டுரை, இச்சைகளின் ஆரம்பம் அநாகரிக ஆடை அமைப்பே என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கியது.தமிழக முதல்வரின் நிகழ்வுக் கதை ஆண் வர்க்கத்திலும் அழகிய புரிதல்கள் உண்டு என்பதை நாசூக்காய் பெண்ணினத்துக்கு உணர்த்தியது. பக்கங்கள் அதிகரிப்பு இயலாவிட்டாலும் சிறப்பிதழ்களுக்காக மட்டுமாவது கூடுதல் பக்கங்கள் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஃபஹ்மிதா பானு
தஞ்சை - தமிழ்நாடு
பினீத் அல்-கர் - குவைத்

கவித்தூறல்கள் வாசித்த பின்னர் இங்கு இருக்க இருப்பு கொள்வில்லை. இயலாமையில் இருக்கின்றோம். எமது மனைவியரின் உள்ளத்து உணர்வுகளை பிரதிபலிப்புக்களாக்கிக்



காட்டியது தமிழக சகோதரியின் குமுறல் கவிதை!பொறுத்துக்

மகளிர் சிறப்பிதழ் கண்டேன். புகழனைத்தும் இறைவனுக்கே!எவ்வளவு அழகான பொக்கிஷ



மாய் வசந்தம் மிளிர்கின்றது..!அனைத்து துறைகள் தழுவிய மகளிர் மீதான வன்கொடுமைகளின் பல்வேறு வடிவங்களை புள்ளிவிவரங்களோடு மிக நேர்த்தியாக எடுத்து வைத்தது சிந்திக்க வைத்தது. பெண் சிசுக்கொலை பற்றிய கொடுமைகளை வசந்தம் தந்த வேளையில் ஏதேச்சையாக, சமீபத்தில் இந்தியத் தொலைக்காட்சித் தொடரில் நடிகர் ஆமிர்கான் வழங்கும் 'சத்யமேவ ஜயதே"- வாய்மையே வெல்லும் தொடர்

## ஃபேஸ்புக்கில்..!

facebook

மகளிர் சிறப்பிதழ் மிக்க அழகு!



@Mohummed Mohusin

அயல்தேசத்து அநாதைகள் உண்மையான கவிதை!



@Anaikara Hameed

முகநூலில் அன்பர்கள்
@ Rizwana Syedali
@mohamad Rouf
@Hameed Ibrahim
@Akbar Ali
@Rasbudeen Mustafa
இன்னும் பலர்..!

அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்! தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!

## ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!
fathima hanim @fathimahanim
Uvamai @Uvamai
mohamadrafi@mohamadrafi90
Rajaragu @Rajaragu77
marsoom@marsoommm
இன்னும் பலர்..!

IPC தமிழ்ப் பிரிவு துரித அழைப்புக்கு..! HOTLINE: 97266683



VASANTHAM - May 2012 New.indd Sec1:2 5/24/12 10:56:51 AM



# தேவை மாற்றம்..!
# அது காலத்தின் கட்டாயம்..!!

உலகின் சாம்ராஜ்யங்களில் கல்வியை எத்தி வைக்கும் அறிவுப்பணியை அநாயசமாக செய்து வந்த சமூகம் கல்வி வேலை வாய்ப்புக்களில் பெற வேண்டிய நியாயமான உரிமைகளுக்காக போராட வேண்டி இருக்கின்றது. கல்விக்கும் இஸ்லாத்திற்கும் இருக்கும் நெருங்கிய பிணைப்பை நம்மில் எத்தனை பேர் அறிவோம்?

இன்று டாலர்களிலும், யூரோக்களிலும் எமது அறிவை அடமானம் வைக்க பறந்து பறந்து செல்லும் நாம் ஒரு காலத்தில் ஐரோப்பிய நூற்றாண்டுகளின் காரிருள் தேசங்களில் கல்வி ஒளியை ஏற்றியவர்கள் என்பதாவது எமக்குத் தெரியுமா..?

இஸ்லாமிய சாம்ராஜ்யம் தலைநிமிர்ந்து கோலோச்சிய பொற்காலங்களில் எமது தலைநகரங்கள் பொது நூலகங்களின் பொக்கிஷங்களாகவும், ஸ்பெயினின் கார்டோபா மற்றும் ஈராக்கின் பாக்தாத் ஆகிய நகரப் பொதுநூலகங்கள் இலட்சக்கணக்கான அரிய நூல்களின் இருப்பிடங்களாகவும் இருந்து வந்திருக்கின்றன என்பது தெரியுமா..?

உலக மதங்களில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தலையாய மார்க்கமாக இஸ்லாம் மிளிர்ந்து கொண்டிருக்க, அதன் சமூகங்களோ, அரிச்சுவட்டுக்குக்கூட ஆர்வம் இல்லாத பிரிவினரை இன்னும் கொண்டுள்ளது.

பூரண கல்வி பெற முஸ்லிம் மங்கையருக்கு இஸ்லாம் உரிமை அளித்தும், மற்ற சமுதாயங்கள், தங்களது நிலையை மாற்றிக் கொண்டு, பருவம் அடைந்த பெண்களை கல்வி கற்க தொடர்ந்து தயார்படுத்த, எமது சமூகமோ பருவம் எய்தும் நேரத்தில்தான், தமது பெண்களின் கற்கும் உரிமையைப் பறித்து விடுகின்றது. இன்று இஸ்லாமிய சமூகம் கல்வியில் பின் தங்கியுள்ளது. எழுத்தறிவு பெற்ற முஸ்லிம் மகளிரின் எண்ணிக்கையோ ஒப்பீட்டளவில் குறைவாகவும் உள்ளது.

முஸ்லிம்களில் படிப்பறிவற்ற நிலை இருக்கக்கூடாது என்பதற்காக, முஹம்மத் (ஸல்) அவர்கள் நேரடியாக நடவடிக்கைகளில் இறங்கிய சம்பவங்களை இஸ்லாமிய வரலாறுகளாக நாம் பதியச் செய்துவிட்டு, அறிவிலிருந்து நம் சந்ததியினரை புறமுதுகிட்டு ஓடச் செய்துகொண்டிருக்கின்றோம். இன்றைய தலைமுறை இதிலிருந்து விலகி நின்றாலும், அந்த அறிவையும் ஏட்டுச்சுரைக்காய் போன்று ஆட்கொண்டு வருவதும் நடக்கின்றது.

அறிவு-கல்வி ஆகியனவற்றின் வளர்ச்சிப்பாதை என்பது ஒவ்வாத கொள்கைகளை உள்ளடக்கிய சித்தாந்தங்களுக்கு எதிரான ஒரு புரட்சியே..! இஸ்லாம் அத்தகையதொரு புரட்சியை இறைவழி சட்டத்தை முன்னிறுத்தி சென்றதால்தான் 23 ஆண்டுகளில், இறைத்தூதரின் சீரிய தலைமையில் அறிவு வளர்ச்சி மிக்க ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த முடிந்தது.

வரலாற்றை ஆராய்ந்தால் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் புரட்சி முழக்கமிட்ட முதல் கொள்கை இஸ்லாமிய தத்துவமே என்பதை நடுநிலையாளர்கள் மட்டுமல்ல, எதிராளிகளும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அத்தகையக் கொள்கையை ஆராதித்துக் கொண்டிருக்கும் சமூகம், உலகின் மற்றைய பாகங்களை விட அதிகமான அளவில் படிப்பறிவற்றவர்களைக் கொண்டிருக்கின்றது.

புத்தொளிக்காலம் ஏற்பட்ட போது ஐரோப்பா கண்டம் மதங்களை கேள்விக்குறியாக்கியது. சிந்தனை ரீதியாக இஸ்லாம் எவ்வாறு அத்தகைய மதங்களைவிட்டு முற்றிலும் புதுமையாக முன்னின்றது என்பதை நாம் அறிவோமாயின், பிற மதங்கள் குறித்த ஐரோப்பா கண்டத்தின் கேள்விக்குறி புரிய வரும்.

ஏன், இஸ்லாமிய சமூகம் கல்வி நிலையில் பின்தங்கிவிட்டது? உலகக் கல்வியென்றும் மார்க்கக் கல்வியென்றும் முஸ்லிம்கள் அறிவினை பிரித்து வைத்துவிட்டது முக்கிய காரணம் என்றால், தனது மார்க்க இறைச்சட்டங்களை எந்நிலையிலும் யாருக்கும் அடகு வைக்காது, நவீனத்துவத்தின் மாறுதல்களுக்கு ஈடு கொடுத்து நடைபயில, இஸ்லாமிய சமூகம் பொதுவாகவும், இந்திய இஸ்லாமிய சமூகம் குறிப்பாகவும் தவறிவிட்டன. அதேபோன்று சரியான வழிகாட்டுதல் இல்லாமையும் ஒரு காரணமாக நின்றது.

எனவே, இவை மாறி, இழந்த அறிவுப் பெருமையை இஸ்லாமிய சமூகம் திரும்பப் பெற வேண்டுமெனில், அதற்குரிய விதையை மார்க்கப் பள்ளிகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மதரஸாக்கள் நவீனப்படுத்தப்பட வேண்டும். கல்வி முறைமைகளில் மார்க்கத்துக்கு முரணானவையாக இல்லாத புதுமைகள் புகுத்தப்பட வேண்டும். முஹம்மத் (ஸல்) அவர்கள் காலத்தில், இறை இல்லங்களும், திண்ணைகளும் எவ்வாறு அவர்தம் தோழர்களின் அறிவு மறுமலர்ச்சிக்கு வித்திட்டதாக அமைந்தனவோ, அதேபோல், வசதிகள் பல பெற்ற இன்றைய இறைஇல்லங்களும், மதரஸாக்களும் நவீன கல்விச் சாலைகளின் கேந்திரங்களாகத் திகழ வேண்டும்.

மதரஸாக்களும், சுயவளர்ச்சி மூலம் வருமான வகைகள் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் பயில்கின்றவர்களும், தம் வாழ்வாதாரங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். ஏனெனில் பொருளாதார பூரணத்துவம் கிடைத்துவிட்டால், வசதிகள்-மாற்றங்கள் பெறுவதும் எளிதாகிவிடும்.

இத்தகைய வருங்கால மாற்றம் இஸ்லாமிய சமூகத்தில் மீண்டும், கி.பி. பதினோறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அல் புரூனிக்கள் போன்ற அறிவார்வலர்களை உருவாக்கித் தரும். அதற்காக எம்மை தயார்படுத்துவோம், அதற்கு இறையருள் என்றும் துணை நிற்கட்டும்.

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!



VASANTHAM - May 2012 New.indd Sec1:3 5/24/12 10:56:51 AM

முகப்புக் கட்டுரை | மு.அ.அப்துல் முஸவ்விர்




**மனிதனை அறியாமை மயக்கத்திலிருந்து விடுவித்து, அறிவு நிதர்சனத்துள் புக வைப்பது கல்வி..!அது மழலையர் பருவம் முதலே முறையாக்கப்பட்டிருக்கின்றதா என்பதே கேள்வி..!அறிவின் தாத்பர்ய உச்சத்தில் அமர்ந்திருந்த சமூகம் ஒன்று அறிவு மாற்ற வளர்ச்சிக்கு செய்ய வேண்டியது வேள்வி..!!**

# ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வி என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் மிக அத்தியாவசியமான ஒன்று.இந்த வயதில் கற்றுத் தரப்படும் கல்விதான் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் அதன் வருங்கால வாழ்வாதார புணரமைப்புக்கும்.., ஏன் அதன் உன்னத ஆளுமைக்கும் அடிகோலுகின்றது என்பது கண்கூடு!

ஆனால், உண்மையில் இன்றைய இளந்தளிர்கள் இத்தகைய கல்வியைப் பெறும் வகையில் சட்டங்களும், அதுசார் அமல்படுத்தல்களும் சரியாக முறைமைப்படுத்தப்பட்டுள்ளனவா.., என்றால் எதிர்மறை பதிலே மிஞ்சுகின்றது.

குறிப்பாக பிள்ளைகளைப் பள்ளியில் சேர்ப்பது என்பது ஒருவித போட்டி மனப்பான்மையின் உந்துதல்களாகத்தான் அமைகின்றதே தவிர, பிள்ளைகளின் அறிவு மற்றும் உடல் ரீதியான ஆட்கொள்ளுதலை முன்வைத்து நடப்பதில்லை.

சற்று விளக்கமாகக் கூறினால், ஐந்து வயதுகளில் ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பது என்கின்ற காலம் எல்லாம் மலையேறிவிட்டது.முன்பெல்லாம் எல். கே.ஜி-இலிருந்து ஆரம்பிப்பார்கள். ஆனால் இப்போதோ, ப்ரி. கே.ஜி., அதற்கும் தாண்டி ப்ளே ஸ்கூல் என்று பல வந்துவிட்டன.இவையெல்லாம் முறைப்படுத்தப்படாத செயல்பாடுகளினால்,வணிக ரீதியாக முன்னேறுகின்றனவே தவிர, உண்மையான தரத்தை முன்வைக்க பெரும்பாலும் தவறிவிடுகின்றன.

இப்போதெல்லாம், அண்டை வீட்டார் தம் பிள்ளைகளை எந்த வயதில், எந்த பள்ளியில் சேர்ப்பார்கள் என்று பார்த்துவிட்டு அதனைவிட குறைந்த வயதில், அதனைவிட சிறந்த பள்ளியில் சேர்க்கின்றார்கள். இதனால், மீச்சிறு வயதிலேயே.., பக்குவமற்ற ஒரு நிலையில் உடல் ரீதியாக சோர்வடையும்





VASANTHAM - May 2012 New.indd Sec1:4 5/24/12 10:56:52 AM

# ஏன் அசத்துவதில்லை..?



இளந்தளிர்கள், சிறந்த அறிவாளியாக வளர்ந்தாலும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் தம் அறிவை கட்டாயமாக்கி வைத்துக் கொள்கின்றன.

விளைவு..?

மன அழுத்தம், விரைவிலேயே சோர்வு, பசியின்மை,அடம் என்று பல்வகை உடல் மற்றும் மனசார் பாதிப்புகளுக்கு ஆளாகின்றன. அதுவும் ப்ளே ஸ்கூலில் சேர்த்துவிடப்படும் பிஞ்சுகளின் நிலையோ இன்னும் பரிதாபம். பெற்றோர் இருவரும் வேலைக்குப் போவதால், காலை முதல் மாலை வரை பணிப்பெண்களின் 'தாய்ப்பாசத்தில்' இருக்க வேண்டிய கட்டாயம். அந்த வயதில் 'அ" என்றால் 'அம்மா" என்று உண்மைத் தாயிடமிருந்து அழகாக கற்க வேண்டிய ஒருவித ஈர்ப்பு இல்லாமற் போய்விடுகின்றது.என்னதான் பராமரிப்பாளர்கள் சிறந்த சேவை அளித்தாலும், முதல் ஆசிரியையாக தன்னைப் பெற்றவளே தன் முன் கற்றுத் தரும்போது ஏற்படுத்தும் தாக்கத்துக்கு அந்த பணாட்டு பதில் சேவை ஈடாகுவது கடினமே..!

அடுத்த நிலைமையாக ஆரம்பப்பள்ளிகளில் காலடி வைக்கும் மழலைகள், முதலில் சுமக்க வேண்டியவையாக இருப்பது புத்தக மூட்டைகளைத்தான்.தனது உடல் எடையைவிட அதிக எடை பள்ளிப் புத்தகங்களை சுமந்து, ஆட்டோக்களில் இறுக்கி அமர்ந்து கொண்டும்,பள்ளிப் பேருந்துகளிலும்,தனியார் வேன்களிலும் நெருக்கியடித்துக் கொண்டு, பாதித் தூக்கத்தில் அப்பாவின் பைக் பெட்ரோல் டாங்கிலோ அல்லது அம்மாவின் ஸ்கூட்டிக்கு முன்பக்கம் நின்று வழிந்து கொண்டோ..., கி.மீ.- தூரங்கள் பயணித்து.., பள்ளியை அடைந்து.., பாடம் பயின்று.., மறுபடியும் அசதியுடன் அதேபோன்று பயணித்து.., மீண்டும் வீட்டுக்கு வந்து.., டியூஷனுக்குத் தயாராகி.., அரைகுறை சாப்பாட்டுடன்.., அசதியாய் டிட்டிபேர் பொம்மையுடன் படுக்கையில் தஞ்சம் புகுகின்றன.

இத்தகைய எந்திர வாழ்க்கை குழந்தையின் மழலைத் தன்மையை இறுக்கமாக்கிவிடுகின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, அவர்களின் பாடத்திட்டங்களோ, இன்னும் பயமுறுத்துகின்றன. என்னதான் இன்றைய மழலைகள் படுசுட்டிகளாக இருந்தாலும்,அவர்களின் உடலியல் ரீதியான அம்சங்கள் அதற்கு ஈடுகொடுத்து தாங்குவதாக அமைந்திருப்பதில்லை. மாறாக, நவீன உணவுப் பழக்கங்களும், முறைகளும் அவர்களை அந்த அறிவுச் சுட்டித்தனத்துக்கு ஊக்கம் தந்து உடல் ரீதியாக தயார்படுத்தி வைக்கும் நிலையில் இல்லை.







விளைவு..!

அதிக மதிப்பெண் பெற நாடி யதார்த்த அம்சங்களின் பின்னால் ஓட ஆரம்பிக்கின்றன. கல்வி முறையும் மனப்பாட முறையையே ஊக்குவிப்பதாக அமைந்திருப்பதால்,மனத்தில் உட்கார வைக்க.., விழுந்து விழுந்து படித்து.., ஒரு புரிதல் இல்லாத அறிவுத்தனத்தை தம்மில் வளர்த்துக் கொள்கின்றன.

ஆரம்பக் கல்வியில் ஏற்படும் இந்த வழக்கம், செயல்ரீதியான விளக்கசார் படிப்புக்களிலும் தொடர்கின்றது.

விளைவு என்ன..?

'மக் அப்' என்று மாணாக்கரிடத்தில் பேசப்படும் இந்த முறை ஒரு ஆபத்தான அம்சமாக வளர ஆரம்பிக்கின்றது.இதன்



VASANTHAM - May 2012 New.indd Sec1:5 5/24/12 10:56:54 AM

மு.அ.அப்துல் முஸவ்விர்

விளைவுகளை கல்வித் துறைகள் பலவும் பல்கலைக்கழக நிலைமைகளில் கண்டு வருகின்றன.

அதற்கு உதாரணமாக,சமீபத்திய சென்னையின், மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று வினா அமைப்பு முறைகளில் ஒருசில மாற்றங்கள் கொண்டு வந்தபோது,ஒரு பெரும் சதவீதத்திலான மாணாக்கர்கள் என்றும் இல்லாத அளவுக்கு Arrears எனப்படும் நிலுவைத் தாள்களை அதிகம் பெற வேண்டிய




நிலை ஏற்பட்டது.

சற்று சிந்தியுங்கள்!

உயிருடன் தொடர்புடைய இந்த அறிவுசார் மருத்துவப் படிப்பில் இத்தகைய 'மக் அப்' என்பதையே ஒவ்வொரு மாணாக்கரும் பின்பற்ற ஆரம்பித்தால் நிலைமை என்னவாகும்..? செயல்முறை அம்சங்களில் அவர்கள் எவ்விதமான புரிந்துகொள்ளலை முன் வைப்பார்கள்..?

எனவே, ஆரம்பக் கல்வி முதற் கொண்டே மதிப்பீடுகள் அம்சம் வெறும் விடைத்தாள்களின் பின்னணியில் அமைந்துவிட்டால் ஒரு மாணாக்கர் சரியான கல்வியை.., புரிந்துகொள்ளலான கல்வியைப் பெற முடியுமா..? எழுதுவதும் எண்ணுவதும் புரிதலின் அடிப்படையில் பாடத்திட்டமாக இருக்காமல் வெறும் அப்படியே மனத்தில் பதிந்துகொள்ளச் செய்யும் விதமாக இருப்பின் அந்த அடிப்படை திறன்கள் உண்மையான பலனை அந்த பிஞ்சு உள்ளத்தில் பதிக்கச் செய்யுமா..?

அடுத்து, புத்தகசுமை..!

ஆரம்பப் பள்ளிகளில் பெயருக்குத்தான் தினப் பாட அட்டவணை என்கின்ற - Period இருக்கின்றனவே தவிர.., அவை பெரும்பாலும் அனைத்து பாடங்களையும் உள்ளடக்கியவனவாக இருக்கும் தினந்தோறும்.!இதனால் ஒரு குழந்தை தினமும் அனைத்துப் பாடப் புத்தகங்கள், அவற்றுடன் இணைந்த Class Work உனப்படும் வகுப்புசார் செயல் புத்தகங்கள், நேற்று செய்த Home Work எனப்படும் வீட்டுப்பாடப் புத்தகங்கள் என்று அனைத்தையும் தினந்தோறும் சுமந்து செல்ல வேண்டிய கட்டாயம்!

வீட்டில் அவர்களுடைய பெற்றோர் அவர்களுடன் (என்றாவது ஒருநாள்) உப்பு மூட்டை தூக்கி விளையாட, தூக்கப்படும் இவர்களோ தினந்தோறும் புத்தகசுமையை உப்புமூட்டைகளாக பள்ளிக்கு தூக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

இதையெல்லாம் மீறி நின்றாலும், ஆசிரியர்களுடனான மழலை மாணாக்கர்களின் தொடர்பு பற்றிய கேள்வி எழுகின்றது.

தனியார் பள்ளிகள் பெருத்துவிட்டதால், பெரும்பாலான பள்ளிகள் பொருளாதார சிக்கலை ஈடுகட்ட ஆரிசியர் தேர்வு முறையில் சிறப்பான கவனம் செலுத்துவதில் தவறிவிடுகின்றன என்றே சொல்ல வேண்டும்.இதனால், ஒன்று திறமை அற்ற ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்துக்கு பணியமர்த்தப்படுகின்றார்கள் அல்லது திறமையான ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்துக்கு அமர்த்தப்படுவதால், அவர்கள் தம் பணியில் ஒருவித புறக்கணிப்பான இலயிப்புத் தன்மையை கையாள நேரிடுகின்றது.இதனால் இருவகைகளிலும் பாதிப்பு ஏற்படுவது ஆரம்பக்கல்வி மாணாக்கருக்குத்தானே..!

இனி அரசாங்க ரீதியான கல்வி தொடர்புடைய அம்சங்களுக்கு வருவோம்!

அறிவை வளர்ப்பது என்பது தனிமனிதன் ஒவ்வொருவனுடைய உரிமையாக இருக்க, அந்த அறிவுக்கு ஆதாரமாக இருக்கும் கல்வி என்பது இந்தியர்களின் அடிப்படை உரிமையாக்கப்பட்டது பத்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?அதுவும் அந்த சட்டம் முழுமையாக நிறைவேற ஏழு ஆண்டுகள் பிடித்தன. எனவே, ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலான குழந்தைகள் அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அமலானது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் என்று கொள்ளலாம்.இந்திய பாராளுமன்றம் 2009-இல் நிறைவேற்றிய கல்வி உரிமைச் சட்டம் (The `Right of Children to Free and Compulsory Education Act 2009' -RTE Act) பல்வேறு புதிய அம்சங்களை முன்வைக்கின்றது.கல்வி வல்லுநர்களின் பார்வையில் இந்த சட்டம் குறித்து இலாபங்களும்,நஷ்டங்களும் மாறி மாறி விமர்சனங்களாக வந்தாலும், இந்த சட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்கு இறுதியான தீர்ப்பை சமீபத்தில் உச்சநீதிமன்றம் அறிவித்துவிட்டது. இதனால், இனி அடிப்படை உரிமை கல்வி



VASANTHAM - May 2012 New.indd Sec1:6 5/24/12 10:56:54 AM




குறித்த அமசங்கள் சட்டரீதியாக செயல்படுத்தப்படும் என நம்பலாம்.

அடுத்து தொடர்ச்சியற்ற போக்கு!

அதாவது, இந்திய ஆரம்பக்கல்விகளில் ஆர்ப்பாட்டமாக சேரும் மாணவ-மாணவியரில் 87% பேர் மேநிலை (பன்னிரண்டாம்) வகுப்பு முடிப்பதற்கு முன்னமே தங்கள் கல்விப்படிப்பை நிறுத்திவிடும் அவலமும் நடக்கின்றது.

இதனைப் போக்க வந்ததுதான் அரசின் கட்டாய இலவச கல்விச்சட்டம். அனைவருக்கும் கல்வி வழங்க அரசுப் பள்ளிகள் போதாது என்பதால், தனியார் பள்ளிகளில் 25% ஒதுக்கீட்டை முன்வைத்தது சட்டம்.அது சரியே (இதில் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு விலக்கு) என்று உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்துவிட்டது.

ஆனால், இனி இத்தகைய சூழலில் எவ்வாறு அரசின் சட்டம் அமலாகும்..? அதன் மூலம் ஆரம்ப நிலையிலிருந்தே கல்வித்தரம் காக்கப்படுமா? போன்றவற்றுக்கு இனிதான் விடை கிடைக்க வேண்டும்.

அடுத்து, ஒழுக்கசார் அம்சங்களுடனான கல்வி..!

சில மாதங்களுக்கு முன்னர் சென்னை பள்ளி ஒன்றில் மாணவன், தனக்கு கற்பிக்கும் ஆசிரியையே கத்தியால் குத்தி கொன்ற சம்பவம், ஆசிரிய-மாணாக்கர் உறவில் விழுந்துள்ள இடைவெளியை அம்பலப்படுத்தியது என்றால்,மற்றொரு பள்ளியின் ஆசிரியை ஒருவர் தான் கற்பித்த பள்ளி மாணவன் ஒருவனுடனேயே தகாத உறவுமுறையுடன் ஓடிப்போன சம்பவம் ஆசிரிய-மாணவர் இடையிலான ஒழுக்க விரிசலை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இத்தகைய நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமானால், ஒழுக்கக் கல்வி உண்மையான பாதையில் கற்பிக்கப்பட வேண்டும்.

அதற்கான அடித்தளமாக..,

முதல் முயற்சியாக பாலர் ஆரம்பப் பள்ளிகளை இருபாலார் முறையிலிருந்து முதலில் ஒருபால் பள்ளி (வகுப்பு)களாக, தனித்தனியே நடத்த வேண்டும்.



முதல் முயற்சியாக பாலர் ஆரம்பப் பள்ளிகளை இருபாலார் முறையிலிருந்து முதலில் ஒருபால் பள்ளி (வகுப்பு)களாக, தனித்தனியே நடத்த வேண்டும். அதற்கான ஆசிரியர்-மாணாக்கர் விகிதாச்சாரங்களை எதிர்ப்பால் விகிதமாக அமைக்காமல், கூடுமான வரையில் மாணவர்-ஆசிரியர்,மாணவியர்-ஆசிரியை எனும் அமைப்பில் கொணர வேண்டும்.தவிர்க்க முடியாதபடச்சத்தில் ஒழுக்கசார் இடைவெளி அமைப்புடன் இந்த விதிகளை சற்று தளர்த்தி நியாயமான அமைப்பில் முறைப்படுத்தலாம்.இதனை கட்டுப்பெட்டித்தனம் என எவரேனும் சொன்னால், மேலே சொன்ன இரு சம்பவங்களுக்கும் வேறு சரியான மாற்றைக் கூறிட முடியாது.

பாலுணர்வுசார் தீயொழுக்கங்களிலிருந்து விழிப்படைவதற்காகப் பள்ளிப் பருவத்திலேயே பாலியல் கல்வி அவசியம் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் இது எத்தனை சதவீதம் சாத்தியமாகும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. சில விஷயங்களில் அரசாங்கத்தின் தவறான அணுகுமுறை எதிர்மறை விளைவுகளைத்தான் தோற்றுவித்துள்ளன. பாலியல் கல்வி போன்ற அம்சங்களை ஆரம்பக்கல்விக்கு அடுத்த நிலைகளில் கொணர அரசும்,இன்னபிற தரப்பினரும் வலியுறுத்தினாலும் அதுவும் தீர்வாக அமைய முடியாது. காரணம் மேற்கத்திய நாடுகளுக்கு வேண்டுமானால் அது அவசியப்படலாம். பரந்த பண்பாட்டுப் பின்புலம் கொண்ட பாரதத்துக்கு இது அவசியமில்லை. ஏனெனில், மேலைநாடுகளுக்கு முற்றிலும் மாற்றான ஒழுக்க சூழலில் வளரும் நமது குழந்தைகளிடம் இது எதிர்மறை எண்ணங்களையே தோற்றுவிக்கும்.

உதாரணத்திற்கு அரசின் எய்ட்ஸ் விழிப்பு உணர்வு இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்!எய்ட்ஸ் விழிப்பு உணர்வு இயக்கம் மக்களிடையே எய்ட்ஸ் எனும் உயிர்க்கொல்லி நோய் பரவாமல் தடுக்கும் நல்ல நோக்கத்தில்தான் கொண்டு வரப்பட்டது. ஆனால்,



VASANTHAM - May 2012 New.indd Sec1:7 5/24/12 10:56:54 AM

அருணை வினோத்



# கடைச்சரக்கா கல்வி..?

**மனிதன் தன் அறிவை சொத்தாகப் பெறுவது அவன் உரிமை!ஆனால், அந்த அறிவின் அடிப்படை வழிமுறையான கல்வியோ கடைச்சரக்காக ஆக்கப்படுவது கயமை..!அதற்கு அந்த மனிதனே காரணமாக நிற்பது மடமை..!**

இந்த இயக்கம் எய்ட்ஸை ஒழிப்பதற்கு இறுதியாக சொன்ன தீர்வு.., அது துவங்கப்பட்ட நோக்கத்தைப் பூர்த்தி செய்ய உதவுவதற்குப் பதிலாக, அதாவது, இறுதி நிலைமையில் விபச்சாரம் தடுக்க வழிவகை மேற்கொள்ளாமல்,எய்ட்ஸ் தவிர்க்க பாதுகாப்பான உடலுறவு கொள்ளுங்கள் என்று சொல்லி, மக்களிடையே விபச்சாரம் பல்கிப்பெருகத்தான் இவ்விழிப்பு உணர்வு இயக்கம் நன்றாகத் துணை புரிந்தது.

மேலும், மனஅழுத்தங்கள் வளரும் வகையிலும் சில அம்சங்கள் நிகழ்கின்றன. சில மாதங்கள் முன்னர், சென்னை ஐ.ஐ.டி மாணவர்,சென்னை அண்ணா பல்கலைகழக மாணவர் ஆகியோர் உட்பட கடந்த வருடத்தில் மட்டும் ஐ.ஐ.டி மாணவர்கள் நான்கு பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இன்றைய கல்விமுறை அவர்களுக்கு கொடுக்கும் திணிப்பு,அழுத்தம் மற்றும் இந்த போட்டி உலகத்தில் முன்னேற மதிப்பெண் அடிப்படையிலான கட்டாயம்.தான் படிக்க நினைத்ததை அல்லது தான் படித்ததையே தன் மகன்-மகள் படிக்க வேண்டும் என்கின்ற பெற்றோரின் அழுத்தம் ஆகியவையே இதற்குக் காரணமாகக் கொள்ளலாம்.இதன் துவக்கம் ஆரம்ப கல்வி முதலே ஆரம்பித்துவிடுகின்றது.ஆனால் பருவ மற்றும் சூழல் மாறுபாடுகள் ஆரம்ப மற்றும் உயர்கல்விகளுக்கிடையே பெரும் இடைவெளியைத் தந்துவிடுகின்றன.அதுமட்டுமல்ல, கல்வி முறையும்,முதலிட மாணவன்தான் திறமையானவன் என்ற எண்ணமும் அதனடிப்படையில் அமைந்த நம் இந்திய பணிச்சந்தையும் அவர்களிடத்தில் ஒரு வெறுமையைத் தந்துவிடுகின்றன.

> பருவ மற்றும் சூழல் மாறுபாடுகள் ஆரம்ப மற்றும் உயர்கல்வி களுக்கிடையே பெரும் இடைவெளியைத் தந்துவிடுகின்றன.

ஆரம்பக் கல்வியின் ஓட்டைகளே பெரும்பாலும் இத்தகைய விளைவுகளுக்குக் காரணம் எனலாம். போதாதற்கு சமச்சீர் கல்வி குறித்த விவாதங்கள்..,பாடத்திட்டங்களின் புதிய சேர்த்தல்கள் மற்றும் குறைத்தல்கள்,அரசியல் செல்வாக்கின் காரணமாக ஏற்படும் கல்வித்துறை மாற்றங்கள் என்று பல்வேறு குளறுபடிகள்..!இவையெல்லாம் ஆரம்பக் கல்வி நிலையிலேயே சரி செய்யப்பட்டால்தான் மாணாக்கர் ஒவ்வொருவரின் வாழ்வும், கல்வி எனும் தோழமையோடு பொருள் பொதிந்ததாக அமையும். வாழ்வாதாரத்துக்கு சரியான ஈடாக தொடரும். இல்லையெனில் வெறும் தகுதியும்,மதிப்பும் சார்ந்த உடைமையாக மட்டுமே இருக்கும்.

எனவே, நல்லதோர் வீணை செய்துவிட்டு.., அதனை நலங்கெட புழுதியினில் வீழ விட்டால்.., அதனைவிட முட்டாள்தனம் எதுவும் உண்டோ..? எனவே, சரியான ஒழுக்க அமைப்பைத் தரும் வகையில் ஆரம்பப்பள்ளி அமைய வேண்டும். ■



VASANTHAM - May 2012 New.indd Sec1:8 5/24/12 10:56:54 AM








ஒருவர் தன்னுடைய மகனுக்கு ஆரம்ப வகுப்பு சேர்க்க மாதக்கணக்கில் பள்ளிகளைத் தேடுவது வாடிக்கையாகிவிட்டது. அதற்கு M.P மற்றும் M.L.A பரிந்துரைகள் வேறு.அதுவும் கட்டணம் ஆண்டுக்கு ஆயிரக்கணக்கில்..!

இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு பள்ளியில் சொன்னார்களாம் இந்த வருட சேர்க்கைக்கு இப்போது வந்து விண்ணப்பம் கேட்டால் என்ன செய்வது,நாங்கள் போன வருடமே முடித்து விட்டோம் என்று?... எதிர்காலத்தில் குழந்தை கருவில் இருக்கும் போதே விண்ணப்பிக்க வேண்டும் போல..!

எங்கே சென்று கொண்டு இருக்கிறது கல்வி..?

தமிழ்த் திரைப்படமொன்றில் வரும் வசனம் ஒன்று நினைவுக்கு வருகிறது IIT க்கு கூட அப்ளிகேசன் ஆன்லைனில் கிடைக்கிறது ஆனால் L.K.G. க்கு இரண்டு மாசத்துக்கு முன்னாடி வாங்கணும்".L.K.G. விண்ணப்ப கட்டண விலை, IIT மற்றும் பல்கலைக்கழக விண்ணப்ப கட்டணங்களை விட அதிகம்.

இதில் குழந்தைக்கு நுழைவு தேர்வு வேறு வைக்கிறார்கள்?நல்ல வேளை பெற்றோருக்கு நுழைவு தேர்வு வைக்கவில்லை.இருப்பினும் சில மேல்மட்ட பள்ளிகளில் அதுவும் உண்டு.

இந்த அளவுக்கு கல்வி வியாபாரமாகி கடைச்சரக்காகிப் போனது ஏன்?...

பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மெட்ரிக் அல்லது சிபிஎஸ்இ பள்ளியில் மட்டுமே படிக்க வைக்க விரும்புகிறார்கள்.

இப்போது எல்லாம் மெட்ரிக் பள்ளிகளில் சமச்சீர் கல்வி முறை அமலில் உள்ளதால், நடுத்தர குடும்பத்தில் உள்ள பலர் சமச்சீர் கல்வி முறையை விரும்பவில்லை,அதனால் பலர் சிபிஎஸ்இ பள்ளிகளை தேடி செல்கின்றனர்,டிமாண்ட் எனும் தேவை அதிகமாக இருக்கும் போது விலை உயர்வும் அதிகமாக இருக்கும் அதுபோல கல்வி கட்டணமும் உயர்ந்து இருக்கிறது.

இப்போது பல மெட்ரிக் பள்ளிகள் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாறிக்கொண்டு இருக்கின்றன.அப்போது தான் அவர்களாலும் அதிக கட்டணம் வசூலிக்க முடியும்,அதிகம் சம்பாதிக்க முடியும்.

இப்போதுள்ள 75% பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் சம்பாதிக்கும் நோக்கோடுதான் செயல்படுகின்றன.சொற்ப பள்ளி,கல்லூரிகளே சேவை மனப்பான்மையோடு செயல்படுகின்றன. சேவையாக இருந்த கல்வி இப்போது வியாபாரமாகி விட்டது என்பது தான் வேடிக்கை. எப்போதோ படித்த ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது."படித்தவன் பாடம் நடத்துகிறான், படிக்காதவன் கல்லூரி நடத்துகிறான்." கட்டண உயர்வுக்கு மக்களின் மனநிலை தான் முக்கிய காரணமாக உள்ளது.

ஒரு நடுத்தர குடும்பத்தின் வருமானத்தில் முக்கால் வாசியைப் வீட்டு வாடகையும்,கல்வி கட்டணமும்தான் சாப்பிடுகிறது.மீதியை தான் மனிதன் சாப்பிடமுடிகிறது.

அரசாங்கமும் இலவச கல்வி கொடுக்க எவ்வளவோ முயற்சிகளை எடுத்து கொண்டு இருக்கிறது.கட்டாய இலவச கல்வி சட்டமும் இயற்றப்பட்டு இருக்கிறது.

டிவி,மிக்ஸ்சி,கிரைண்டர் போன்ற இலவசங்களை வரிசையில் நின்று பெற்று கொள்வதை போல இலவச அரசு கல்வி கூடத்தில் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க கூடிய மனநிலை இல்லை.மக்களின் மனநிலையை என்ன சொல்ல?... மக்களுக்கு, அரசு இலவசமாக தரும் பொருட்களின் தரத்தை பற்றி கவலை இல்லை...! ஆனால்.., அரசு பள்ளிகளின் தரம் பற்றிய கவலை..! இப்போதெல்லாம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் நன்றாகதான் கல்வி கற்பிக்கப்படுகிறது,அதன் தேர்ச்சி விழுக்காடும் உயர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

**ஒரு நடுத்தர குடும்பத்தின் வருமானத்தில் முக்கால் வாசியை வீட்டு வாடகையும்,கல்வி கட்டணமும்தான் சாப்பிடுகிறது..!**

தனியார் வசம் உள்ள மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகளில் படித்தால் தான் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்ற தவறான மனநிலையே இதற்கெல்லாம் காரணம்.

அரசு பள்ளி,கல்லூரிகளில் படித்து உயர்ந்தவர்கள் இந்த சமுதாயத்தில் பல பேர் இருக்கிறார்கள். அவர்களை இந்த பெற்றோர்கள் முன்மாதிரியாக கொள்ள வேண்டும்.

மக்களாய் பார்த்து மாறினால் தான் இதற்கு விடிவுகாலம்,இல்லையென்றால் கல்வியைக் கடைச்சரக்காக்கும் வியாபாரத்தை யாராலும் மாற்ற முடியாது.





VASANTHAM - May 2012 New.indd Sec1:9 5/24/12 10:56:55 AM

# சத்தியத்தின்பால் பயணம்..! அறியச் செய்ய பயிலரங்கம்..!!





பிரபல அழைப்புப் பணியாளரும், எழுத்தாளருமான ஜைனப் ஹஸன் அஷ்ரீ அவர்கள் நடத்திய முஸ்லிமல்லாத சகோதரிகளுக்கு மத்தியில் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்வது எப்படி என்பது குறித்த கருத்தரங்கு இஸ்லாமிய நிலைய மகளிர் தலைமை கிளை- ரவ்தா மற்றும் சால்மியா மகளிர் கிளையில் நடைபெற்றபோது...!

# தொலைக்காட்சி நிகழ்ச்சி...! தயாரிக்க பயிற்சி..!!

தொலைக்காட்சி நிகழ்வுகளை வழங்குவது மற்றும் நிகழ்ச்சி தயாரிப்புக்கள் குறித்து,இஸ்லாமிய நிலைய அழைப்புப் பணியாளர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று மூன்று நாட்கள் டைஸ் மையத்தில் நடைபெற்றது. இஸ்லாமிய நிலைய தகவல் தொழில்நுட்பத் துறையின்,தொலைக்காட்சிப் பிரிவு சார்பாக நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் ஜோர்டான் தொலைக்காட்சித் துறையாளரும்,அல்-ரிஸாலா தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமான சகோதரர் ஹாஷிம் அப்துஸ் ஸலாம் அல்-கஸவீன் அவர்கள் இம்மூன்று நாள் முகாமை நடத்தி வைத்தார்.இஸ்லாமிய அழைப்புப்பணி தொடர்பான நிகழ்ச்சி தயாரிப்பு நுணுக்கங்கள்,நிகழ்ச்சி வழங்கும் பாணி,தொடர் தயாரிப்புக்கள் உள்ளிட்ட தொலைக்காட்சித் துறை தொடர்பான வகுப்புக்கள் நடைபெற்றன. இதன் இறுதி செய்முறை வகுப்புக்கள் ரவ்தா,ஜமிய்யது இஸ்லாஹ், தொலைக்காட்சி படப்பிடிப்பு அரங்கில் நடைபெற்றது.

தமிழ் உள்ளிட்ட, இஸ்லாமிய நிலையத்தின் பல்வேறு மொழிப் பிரிவைச் சேர்ந்த சகோதரர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியை CAMS ஏற்பாடு செய்திருந்தது.

















# நாமும் சாதிக்கலாம்..!

10-ம் வகுப்புக்குப் பின்னர்..!

100% 100% 100% 100% 100% 100%

- **DIPLOMA**
  - D.C.E., D.M.E., D.E.E.
- **XII - H.Sc.**
  - **PROFESSIONAL COURSES**
    - **ENGINEER**
      - ENGINEERING ENTRANCE
      - B.E.,B.Tech
      - P.G. M.E., M.Tech., M.S.
      - RESEARCH M.Phil., Ph.d.,
    - **DOCTOR**
      - MEDICAL ENTRANCE
      - M.B.B.S., B.D.S., B.V.Sc.
      - P.G. M.S., M.D.,M.V.Sc.,
      - RESEARCH
    - **AUDITOR**
      - GRADUATION WITH COMMERCE & ACCOUNTS
      - I.C.W.A.
      - C.A.,C.S.
    - **LAWYER**
      - B.A. B.L., 5 Years Course
      - GRADUATION B.A,B.Sc.,B.Com., B.B.A.
      - B.L. / L.L.B. 3 Years Course
      - M.L.
    - **TEACHER**
      - GRADUATION B.A,B.Sc.,B.Com., B.E.
      - B.Ed. GRADUATION M.Ed., P.G.'s
      - NET - UGC or LECTURERS
- **VOCATIONAL**





VASANTHAM - May 2012 New.indd Sec1:11 5/24/12 10:57:02 AM

# என்ன படிக்கலாம்..?

12-ஆம் வகுப்புக்குப் பின்னர்..!

100% 100% 100% 100% 100% 100%

## OPTION 1

**ENGG.**
B.E.,
B.Tech.,
B.Arch.,

Higher Studies | Govt. Service | Teaching and Research | Consultancy | Service in Private Sector | Own Industry

**SCIENCE**
B.Sc., (Applied Maths)
B.Sc., (Applied Physics)
B.Sc., (Applied Chemistry)
B.Sc., (Maths)
B.Sc., (Physics)
B.Sc., (Chemistry)
B.Sc., (Geology)
B.Sc., (Statistics)
B.Sc., (Computer Science)

Higher Studies | Jobs in Teaching | Jobs in Public or Private Sector | Govt. Service thro' Competitive Exam

## OPTION 2

**MEDICAL**
M.B.B.S.,
B.D.S.
B.Pharm.
BSc. (Nursing)
B.S.M.S. (Sidha)
B.U.M.S. (Unani)

**AGRICULTURE**
B.Sc.(Agriculture)
B.Sc..(Horticulture)
B.Sc.(Agri.Engg.)
B.Sc..(Forestry)
B.V.Sc..
B.F.Sc.(Fisheries)

Higher Studies | Govt. Services | Service in Private Sector | Private Practice or Self Employment

**SCIENCE**
B.Sc. (Zoology)
B.Sc. (Botany)
B.Sc. (Bio-Chemistry)
B.Sc. (Home Science)
B.Sc. (Nutrition)
B.Sc. (MIcro Biology)
B.Sc. (Textile Design)
B.Sc. (Psychology)

Higher Studies | Jobs in Teaching | Jobs in Public or Private Sector | Govt. Service thro' Competitive Exam

## OPTION 3

B.Com.
B.B.A.
B.A. (Corporate
Corporate Secretaryship

LEAD TO

1. Chartered Accountants
2. Cost & Work
3. Company Secretaries

## OPTION 4

B.L.
B.I.M. (Labour Management)
B.F.A. (Fine Arts)
B.A. (Industrial Organisation)
B.A. (Tamil)
B.A. (English)
B.A. (History)
B.A. (Economics)

Lawyers | Teachers | Employment as Labour Officers, Artists | Officers or Clerks or Typists in State Govt. & Public Sector

## OPTION 5

Secretary Teaching & Training
Diploma in Pharmacy
Training in Physical Education
Training in Science

## OPTION 6

Direct to Employment
Self Employment
Business or
Agriculture
(Coorrespondence \Courses are Available)



அகார் முஹம்மத்

*தேசீய நலனில் முஸ்லிம்களின் பங்கு..! - 2*
*ஃபிப்ரவரி 2012 இதழ் முகப்புக் கட்டுரை தொடர்ச்சி..!*



# மனிதநலன்களுடன் தொடர்பு மார்க்கத்தின் உன்னத சிறப்பு..!

இந்த முஸ்லிம் சமுதாயம் தன்னலம் பார்க்காது, பிறருக்காக..,பிறர் நலனுக்காக..,பிறருடைய வாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்காகவென்றே உருவாக்கப்பட்ட சமுதாயம்.இந்த வாழ்க்கைநெறியை ஏற்றுக்கொண்ட தனிப்பட்ட மனிதர் ஒவ்வொருவரும் பிறருக்கென தம் வாழ்வை அர்ப்பணித்து வாழும் மனிதராகவே இருப்பர்.

எனவே, இந்த புனித நோக்கமே ஒரு இறைநம்பிக்கையாளனின் நாதமாக இருக்க வேண்டும்.தன்னலம் பாராமல்..,தன்னை அர்ப்பணித்து..,தனது.., காலத்தை..,தனது நேரத்தை.., தேவைப்பட்டால் தனது உயிரைக்கூட அர்ப்பணித்து.., உலகத்தில்.., தான் வாழ்கின்ற பூமியில் நீதியை, சகோதரத்துவத்தை, சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு போராடுபவன்தான் உண்மையான இறைநம்பிக்கையாளன்..!

திருக் குர்ஆன் எத்துணை அழகாக கூறுகின்றது பாருங்கள்:-*இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் 'ருகூவும்' 'ஸுஜூதும்' செய்யுங்கள். உங்கள் இறைவனுக்கு அடிபணியுங்கள். மேலும், நற்பணி ஆற்றுங்கள்..!"*

எனவே வணக்க வழிபாடுகள் மட்டுமே வெற்றிக்குப் போதுமானதல்ல..! மாறாக, அதற்கு அடுத்து நீங்கள் மனிதர்களுக்கு நன்மை செய்திட வேண்டும்.உதவி,ஒத்தாசைகள் செய்திட வேண்டும். இறைநம்பிக்கையாளனுடைய வரைவிலக்கணம் என்ன தெரியுமா..? அவன் நன்மைகள் ஒவ்வொன்றுக்கும் திறவுகோலாகவும்...,தீமைகள் அனைத்துக்கும் பூட்டாகவும் பரிணமிப்பவன்.

சிலவேளை எம்முடன் இணைந்திருப்பவர்கள் இனத்தால்,மொழியால்,நாட்டால்,தேச-பிரதேசங்களால் வேறுபட்டிருக்கக்கூடும். சிலபோது, அவர்கள் மீது வெறுப்பு கனன்று கொண்டிருக்கும்.

ஆனால், அந்த வெறுப்பானது, அந்த குறிப்பிட்டவர்கள் மீது அநீதம் இழைக்கும் அளவுக்கு உங்களை கீழ்த்தரமானவர்களாக ஆக்கிவிடக்கூடாது.நியாயமாகவே நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்.., அனைவரிடமும்! என்று சொல்கின்ற மார்க்கத்தின் உண்மை நிலைப்பாடுகள் எத்துணை அழகியதாக இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

*மனிதர்களில் சிறந்தவன் யார்..? உயர்ந்தவன் யார்..? அடுத்த மனிதருக்கு பிரயோசனமாக இருப்பவன் எவனோ அந்த மனிதன்..!*இது அண்ணலார் (ஸல்) அவர்களின் அமுதமொழி!

பொதுவாக இறைநம்பிக்கையின் அடிப்படை அம்சங்களை அறிந்திருக்கும் நாம்,இத்தகைய இறைநம்பிக்கைக்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் தந்திருக்கின்ற இன்னபிற வரைவிலக்கணங்களையும் நோக்க வேண்டும்.

இந்த இறைநம்பிக்கை எழுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டதாகும்.அதில் மிக உச்சமானது "லாஇலாஹ இல்லல்லாஹ்-வணக்கத்துக்கிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறெவரும்...,எதுவும் இல்லை..!"-

இந்தக் கிளைகளில் மிகக் கடைசித் தரமாக இருப்பது, பாதையில் மனிதர்களுக்கு ஏதோ ஒரு வகையில் இடையூறாக இருந்து, தீமை விளைவிக்கக்கூடிய கற்கள்,முட்கள் போன்றவற்றை அகற்றுவதே..!"

அற்பமான கற்கள்,முட்களை அகற்றுவதைக்கூட இறைநம்பிக்கையின் ஒரு கிளையாக சொல்லும் மார்க்கம் இஸ்லாம்!அதுமட்டுமல்ல, வெட்கமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளை என்று எழுபதுக்கும் அதிகமான கிளைகளில் மூன்றை மட்டும் குறிப்பிட்டு சொன்னார்கள்.இன்னும் பலவற்றை நாம் தேடிப் பார்க்க வேண்டும். அவ்வாறு தேடிப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை, மனிதநலன்களுடன் தொடர்புடையவையாக இருப்பதை நாம் காண முடியும்.

**அற்பமான கற்கள், முட்களை அகற்றுவதைக்கூட இறைநம்பிக்கையின் ஒரு கிளையாக சொல்லும் மார்க்கம் இஸ்லாம்!**

அடுத்த இதழில்..,இறைநாடின்..!



VASANTHAM - May 2012 New.indd Sec1:13 5/24/12 10:57:09 AM



*ஃபிப்ரவரி 2012 இதழ் நேர்காணல் தொடர்ச்சி..!*

# இலக்கு பதினான்கு..! இயக்கத்தின் உயிர் மூச்சு..!!

**பொதுவாக நோக்கினால் ஆசிய நாடுகளைப் பொருத்தவரை இஸ்லாமிய இயக்கத்தின் கொள்கை கோட்பாடுகள்தான் இன்று இருக்கின்ற ஏராளமான அழைப்புப்பணிக் களத்தாருக்கும் அடிப்படை என சொல்ல முடியும்.பல்வேறு தரப்பினரும் பங்கு கொண்டிருக்கும் இன்றைய அழைப்புப் பணிக்களத்தில் இஸ்லாமிய இயக்கம் குறிப்பிட்டு என்ன செய்கின்றது..?**

இன்றைய இலங்கை இஸ்லாமிய இயக்கத்தின் சுலோகம் தூய தேசம்-மன்னிக்கும் இரட்சகன்!இதனை அடிப்படையாக வைத்து ஆறு படித்தர செயல்பாடுகளை எமது இயக்கம் முன்வைக்கின்றது.முதலில் தனிமனிதன்.2.குடும்பம் 3.அமைப்புக்கள்,4. கிராமங்கள்.5.தலைமைத்துவம் 6.சமூகம்!இவற்றைப் பூர்த்தியாக்க மொத்தம் 14 தனித்தனி இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.இவற்றை விளக்கப்படுத்தினால் பேட்டி நீண்டுவிடும்.

எனவே, குறிப்பாக ஆறாவதாக சொல்லப்பட்ட சமூகம் எனும் செயல்பாட்டின் கீழ் இஸ்லாமிய வாழ்க்கை முறை,இஸ்லாமிய நாகரிகம்,இஸ்லாமிய பண்பாட்டை நோக்கி பிற சமூகங்களைக் கவரும் விதமாக முஸ்லிம் சமூகத்தை மாற்றியமைத்தல் ஆகியன சமூக மாற்றத்துக்கான துணை இலக்குகளாக இஸ்லாமிய இயக்கம் கொண்டிருக்கின்றது.சுருக்கமாக சொன்னால் எமது சமூகம் ஓர் அழைப்புப்பணி சமூகமாக மாற வேண்டும்.

நான் ஏற்கனவே சொன்ன 14 இலக்குகளைக் கண்காணிக்க 14 தனி அமைப்புக்கள் உண்டு.இதற்கு பிரதானமானதாக, ஷேக் அகார் முஹம்மத் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஹய்யத்து ஷரீஆ-ஷரீஅத் அறக்கட்டளை செயற்படும்.அனைத்து இயக்க அம்சங்களும் இந்த அமைப்பின் பரிசீலனைக்கு சென்ற பின்னரே முடிவுக்கு வரும்.இதன் அடிப்படை என்னவெனில் இயக்கத்தின் செயல்பாட்டு அம்சங்கள் ஒவ்வொன்றிலும் ஷரீஅத் வழிகாட்டல்கள் பேணப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதே..!

அடுத்த, இலக்கு முஸ்லிமல்லாத இலங்கையருக்கு ஏகத்துவ அழைப்பை எத்தி வைப்பது..! இதனை செயல்படுத்த ஹிரா எனும் நிறுவனம் ஒன்று இருக்கின்றது.

மூன்றாவது இலக்கு முஸ்லிம் சமூகத்தை இஸ்லாத்தை திருக் குர்ஆன் மற்றும் ஸுன்னா எனும் நபிவழியை நோக்கிக் கொணருவது..!அதற்கு இஸ்லாஹ் எனும் பிரிவு ஒன்று இருக்கின்றது.அதன் பொறுப்பாளராக நான் இருக்கின்றேன்.

இவ்வாறு இலங்கையின் சமூக,அரசியல்,பொருளாதார நிலைகளை உயர்த்தும் அளவில் அனைத்துத் துறை தழுவிய 14 இலக்குகளை நிர்ணயித்து அதன் ஊடாகத்தான் எமது இலட்சியத்தை அடைய முயற்சிக்கின்றோம்.

**இஸ்லாமிய இயக்கத்தின் சுலோகம் தூய தேசம், மன்னிக்கும் இரட்சகன்!**

**இந்த இலட்சியங்களை அடைய குறிப்பிட்ட காலவரையறை எதனையும் ஜமாஅத் நிர்ணயித்திருக்கின்றதா..?**

ஆம்..! ஒவ்வொரு எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவற்றை ஜமாஅத் மீளாய்வு செய்யும். நான்கு வருடத்துக்கு ஒரு முறை இவை சார்ந்த பணிகள் குறித்து அறிக்கை தரப்படும்.

**இன்றைய அத்தியாவசிய தேவையாக இருக்கும் முஸ்லிமல்லாத இலங்கையருக்கு ஏகத்துவ அழைப்பை எத்தி வைப்பது குறித்து இயக்கத்தின் பணிகள் என்ன.., அதற்கான திட்டங்கள் குறித்து..!**

*வினாக்கள் தொடர்கின்றன.., இறைநாடின் வரும் இதழ்களில்..!*



VASANTHAM - May 2012 New.indd Sec1:14 5/24/12 10:57:10 AM

மே 13: அன்னையர் தினம்

# அன்னையே.., நீயே..!



பெற்ற பாரத்தை
இறக்கி
வைத்தாலும்
சுமந்து கொண்டுதான்
இருக்கின்றாள் இன்றும்..!

அன்பு அனைத்தையும்
சொந்தமாக்குகிறது..,
நமக்கு எவ்வித விலையும்
நிர்ணயிக்கபடாமலே..!

பெற்ற தாயும் நட்டு
வைத்த மரமும்
ஏமாற்றுவதுமில்லை..,
வெறுப்பதுமில்லை.,
நாம் ஒதுக்கி
வைத்தபோதும்..!

யார் இவள்..?

பொறுப்பான தாய்..!
உயர் அதிகாரி..!
சமூக சேவகி..!
எழுத்துலக படைப்பாளி..!
சிந்தனையாளி..!
கொடை வள்ளல்..!

அத்தனை பெயர்களும்
அறுந்து கிடக்கின்றன..,
உயிர் பிரிந்திருக்கையில்
அவளுக்கு..!



VASANTHAM - May 2012 New.indd Sec1:15 5/24/12 10:57:10 AM

# திருக் குர்ஆன்

அத்தியாயம் 112

**அல்-லஹப்**

இஸ்லாத்தின் எதிரி அபூ-லஹப் என்பவனை
சபித்து இறங்கிய அத்தியாயம் இது..!
இதன் இன்னொரு பெயர்

**அல்-மஸத்**

மக்காவில் அருளப்பட்டது

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١

تَبَّتۡ يَدَاۤ اَبِىۡ لَهَبٍ وَّتَبَّ ۝٢

112:1 த(b)ப்பதிய்யத அ(b)பி லஹ(b) பி(ன்)வ் வத(b)ப்

111:1 அபூலஹபின் கைகள் முறிந்துவிட்டன. மேலும், அவன் நாசமாகி விட்டான்.

مَاۤ اَغۡنٰى عَنۡهُ مَالُهٗ وَمَا كَسَبَ ۝٣

112:2 மாஅ(gh)க்னா அன்ஹூ மாலுஹூ வமா கஸ(b)ப்

111:2 அவனுடைய செல்வமும் அவன் சம்பாதித்தவையும் அவனுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை.

سَيَصۡلٰى نَارًا ذَاتَ لَهَبٍ ۝٤

112:4 ஸயஸ்லா நாரன் ஜா(za)தலஹ(b)பின்(வ்)

111:3 விரைவில் அவன் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் போடப்படுவான்.

وَّامۡرَاَتُهٗ ؕ حَمَّالَةَ الۡحَطَبِ ۝٥

112:4 வம்ரதுஹூ ஹம்மா லதல் ஹத(டி)ப்

111:4 அவனுடன் அவனுடைய மனைவியும் அவளோ (இங்கும் அங்கும்) புறம்பேசித் திரிபவள்.

فِىۡ جِيۡدِهَا حَبۡلٌ مِّنۡ مَّسَدٍ ۝٦

(Fi)ஃபீஜீ (di)திஹா ஹ(b)புலும் மி(d)ம் மஸத்(d)

111:5 அவளது கழுத்தில் முறுக்கேற்றப்பட்ட கயிறு இருக்கும்!

# யூஸுஃபும் சகோதரர்களும்.! - 3

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில்
மழலைப்ரியன்

## சகோதரர்களின் திட்டம்..!



சகோதரர்கள் யூஸுஃபை கிணற்றில் தள்ள முடிவு செய்தனர். அப்படியே செய்யவும் செய்தனர். யூஸுஃப் கிணற்றில் தள்ளப்பட்டார். தனியாகக் கிடந்தார். ஆனால், யூஸுஃப் பயப்படவில்லை. அல்லாஹ் தன்னுடன் இருப்பதை அவர் உணர்ந்திருந்தார். மற்ற சகோதரர்கள் அந்தி சாயும் நேரத்தில் வீட்டிற்குத் திரும்பினர்.

அவர்கள் தம் தந்தையிடம் அழுதபடி சொன்னார்கள். நாங்கள் அனைவரும், மலை மீது போட்டி போட்டு ஓடினோம். யூஸுஃப் தனியாக ஆட்டு மந்தையுடன் தங்கிவிட்டான். ஒரு ஓநாய் வந்து அவனைக் கொன்றுவிட்டது. நீங்கள் எங்களை நம்பமாட்டீர்கள் என்று தெரியும். இருந்தாலும் நாங்கள் சொல்வது அனைத்தும் உண்மைதான்."

அவர்கள் யூஸுஃபின் சட்டையைக் காட்டினர். அது ஏதோ ஒரு மிருகத்தின் இரத்தத்தால் நனைக்கப்பட்டிருந்ததது. ஆதற்கு யஃகூப் நபி இல்லை! நீங்கள் நான் நம்ப வேண்டும் என்பதற்காக ஒரு கதையைக் கட்டியுள்ளீர்கள். நீங்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை. இப்போது நான் அல்லாஹ்வையே உதவிக்கு எதிர்பார்த்தவனாய் இருக்கின்றேன்" என்றார்.

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*



VASANTHAM - May 2012 New.indd Sec1:16 5/24/12 10:57:11 AM

லைலா அஸ்கர்

தமிழாக்கம்:டாக்டர்.பீ. ஹாமிது அப்துல்லாஹ்

# பர்தாவின் உன்னதம் பதின்பருவத்தின் கவுரவம்



இக்கட்டுரையாசிரியர் , வெஸ்டர்ன் பிரிட்ஜ் (Western Bridge) பள்ளி மாணவி. அமெரிக்காவின் 'லாஸ் ஏன்ஜல்ஸ் டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையாகும் இது.

**பர்தா அணிவதைப் பற்றி பதின்பருவ அமெரிக்க கல்லூரி மாணவி ஒருவரின் அனுபவம், வசந்த வாசகர்களுக்காக..!**

ஒரு நேரத்தில், பர்தா அணிவதைப் பற்றி மிகவும் அச்சம் கொண்டிருந்தேன் நான்!

பெரும்பாலான மக்களைப்போல, எனக்கும் 'முஸ்லிம் பெண்கள் ஏன் பர்தா அணிகின்றனர்?' என்ற ஐயம் எழவே செய்தது.

பருவம் எய்திய பின்பு, எனது முதல் எண்ணம், எனது முதல் அச்சம், எனது தலைமுடியை மறைக்கும் பர்தாவை நானும் அணிய வேண்டுமே என்பதே!

பர்தா அணிவதன் உண்மைப் பொருள் என்னவென்பதைப் பிறகு விளங்கியதும் பர்தா அணிய வேண்டும் எனும் திடமான முடிவை மேற்கொண்டேன். ஆனால் அதனை மெல்ல மெல்லத் துவங்கினேன்.

தென் கலிஃபோர்னியா இஸ்லாமிய மையத்திலுள்ள மஸ்ஜிதுக்குச் செல்லும்போது மட்டும் பர்தா அணிவதை வழக்கமாக்கிக் கொண்டேன். அத்துடன் கைகளையும், கால்களையும் மறைக்கும் நீண்ட உடைகளையும் அணிந்து வந்தேன்.

பிறகு படிப்படியாக தோழிகளின் வீடுகளுக்குச் செல்லும்போது பர்தாவுடன் சென்றேன். கடைசியாக, வசந்தகால விடுமுறைக்குப் பிறகு கல்விக்கூடத்திற்குச் செல்லும்போது பர்தாவை அணிந்து சென்றேன்...,இப்போது துணிவுடன்..!

பள்ளிக்கூடத்திற்கு பர்தாவுடன் செல்வதைப் பற்றித்தான் மிகவும் அச்சம் கொண்டிருந்தேன். ஆனால், இப்புதிய அனுபவம் எனக்கு உற்சாகம் மிகுந்த அனுபவமாக அமைந்துவிட்டது. எல்லோரும் என்னை வியப்புடன் பார்ப்பது எனக்குள் மிகுந்த பரபரப்பையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

வகுப்பு இடைவேளையின்போது சகமாணவிகள் பர்தாவைப் பற்றி பல கேள்விகளை எழுப்பினர். நான் பர்தா அணிந்திருப்பதைப் பார்த்த எனது ஆசிரியையும் அதன் காரணங்களை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினார். ஆகவே, வரலாறு பாட வகுப்பின்போது அது பற்றி உரையாடலாம் எனக் குறிப்பிட்டார். இது நடந்தது பல ஆண்டுகளுக்கு முன்பு..! திருமறை வலியுறுத்தும பர்தாவின் பல நன்மைகளை எனது அனுபவத்தில் கண்டு கொண்டேன்.

முதலாவதாக, நான் ஒரு பெண் என்று மரியாதை காட்டப்படுகிறது. ஒரு பால் பொருள் (Sex Object) என்று நோக்கப்படுவதில்லை.

இரண்டாவதாக, நான் ஒரு இஸ்லாமியப் பெண் என்று மக்களால் அறியப்படு கின்றேன். பர்தா அணிவதன் மூலம் நான் மற்றவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளவும், மற்றவர்கள் என்னைத் தெரிந்து கொள்ளவும் முடிகிறது. நான் பர்தா அணியவில்லை என்றால், அதைப்பற்றி கேள்விகள் யாரும் கேட்கப்போவதில்லை. பர்தாவைப் பற்றிய ஐயங்கள் எழுவதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடக்கூடும்.

பர்தா பற்றிய வியத்தகு அனுபவங்கள் எனக்கு ஏற்பட்ட போதிலும், மற்றவர்கள் எவரும், எவரையும் வற்புறுத்துவது கூடாது எனக் கருதுகிறேன். அடிக்கடி பர்தா அணிவது பற்றிய தவறான, வழிதவறிய அழுத்தம் தரப்படுகிறது. பர்தா அணியாதவர்கள் ஏதோ பெரும் தவறிழைத்துவிட்டனர் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்து விடக்கூடாது. மாறாக, பர்தா ஏன் அணிய வேண்டும் என்பதை மென்மையாக எடுத்துச் சொல்ல வேண்டும். மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை எடுத்துச் சொல்ல வேண்டுமேயல்லாது, அவைகள் பற்றி கட்டாயப்படுத்தக் கூடாது.

பர்தா அணிதல் என்பது ஒருவரின் நெறியை பகிரங்கமாகப் பறைசாற்றுவதாகும். அதன் மூலம், ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ளக் கூடும்.

ஏனையவற்றைவிட மதத்தைப் பின்பற்றுதல் மிகவும் எளிதானது என்பதை உணர்த்துவதாக பர்தா அமைந்துள்ளது. வீண் பேச்சுக்களில் ஈடுபடுவதில்லை என்பதை நான் நிச்சயமாக அறிந்து விடுவதைக் காட்டிலும், எனது தலைமுடிகள் பர்தாவினால் மறைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து விடுவது மிகவும் எளிதாகும்.

பர்தா அணிவதன் மூலம் 'எனது குணநலன்களில் சிறந்த மாற்றங்கள்' ஏற்பட்டுள்ளன.

பர்தாவைப் பற்றி தவறான கருத்துக்களே மக்களிடம் இன்னும் நிலவி வருகிறது. ஏனெனில் மற்றவர்களை மதிப்பிடுவது என்பது மிகவும் எளிதாகும்.

பர்தா அணிந்த பெண்மணி ஒருவர் தனக்கு எதிரில் வரும் ஒருவரைப் பார்க்க நேரிடின், அவர் 'நல்லவரா?' அல்லது 'கெட்டவரா ?' என்பதை எளிதில் மதிப்பிட்டு விடலாம்.

> **இப்புதிய அனுபவம் எனக்கு உற்சாகம் மிகுந்த அனுபவமாக அமைந்துவிட்டது.**

நன்றி : சேக்கனா ஆ. நிஜாம்



VASANTHAM - May 2012 New.indd Sec1:17 5/24/12 10:57:12 AM

*ஓங்க வேண்டும் வனிதையரின் மேன்மை..! ஒழிய வேண்டும் அவர் மீதான வன்மை..!*
*மார்ச் 2012,மகளிர் சிறப்பிதழ் முகப்புக் கட்டுரை தொடர்ச்சி..!*



# தீர்வு இங்கே..!

## சரி மகளிருக்கெதிரான வன்கொடுமை குறித்த பிரச்னைகளை இனி ஆய்வோமா..?

முதலில், 2001-இல் 53 சதவிகிதமாக இருந்த பெண்கல்வி, இன்று 65 சதவீதம்.ஆனால்,திருமணச் சந்தையில் பெண் அதிக வரதட்சணை கொடுக்க வேண்டியுள்ளது. சுருக்கமாக சொன்னால்... கல்வி, பெண்ணுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த அதிகாரத்தை குடும்ப நிறுவனம் பறிக்கிறது.

குடும்ப பாலியல் வன்கொடுமை குடும்ப உறுப்பினர்கள்,உறவினர்கள் சார்பாகவும் மற்றும் பணியிட பாலியல் வன்கொடுமை சகஊழியர்கள் மற்றும் மேலதிகாரிகள் மூலமாகவுமே அதிகம் நடப்பதாக சம்பவங்கள் காட்டுகின்றன.

தீர்வு என்ன?

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களிடையே அன்யோன்யமான கலந்துறவாடல்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வு,பெண் குழந்தைகள் மத்தியில் ஒழுக்கரீதியான பயிற்சி மற்றும் விழிப்பு உணர்வு ஆகியன மட்டும் மூலமே இதற்கு முடிவு கட்ட முடியும்.

ஆனால், இன்றைய நாகரிகச் சூழலில் இது சாத்தியமா..?

நிச்சயம் சாத்தியம்..!

இஸ்லாமிய மார்க்கம் ஒரு அழகிய முறையை முன்வைக்கின்றது.குடும்ப உறுப்பினர்கள்,உறவினர்கள் முன்னிலையில் தங்களுடைய கலந்துறவாடல் எல்லை எது என்பதை வருணிக்கின்றது.அதன் இறுதிமறை திருக் குர்ஆன் கூறுகின்றது:

...(உங்களுடைய) பெற்றோர்கள், உறவினர்கள், அநாதைகள், மிஸ்கீன் (வறியவர்)கள் ஆகியோருடன் நற்பண்போடு நடந்து கொள்ளுங்கள் மனிதர்களிடம் நல்லனவற்றைப் பேசுங்கள்...! -2:83

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களுடைய வீடுகளைத் தவிர மற்றவர்களின் வீடுகளில் அந்த வீட்டாரின் இசைவைப் பெறாமலும், அவர்களுக்கு ஸலாம் கூறாத வரையிலும் நுழையாதீர்கள். இந்த வழிமுறைதான் உங்களுக்கு மிகச்சிறப்புடையதாகும். நீங்கள் இதனை நினைவில் வைப்பீர்கள் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், அங்கு எவரையும் நீங்கள் காணவில்லையென்றால், உங்களுக்கு அனுமதி அளிக்கப்படாத வரையில் அங்கே நுழையாதீர்கள். மேலும், உங்களிடம் "திரும்பிச் செல்லுங்கள்" என்று கூறப்பட்டால், உடனே திரும்பிவிடுங்கள். இதுவே, உங்களுக்கு மிகத் தூய்மையான நடைமுறையாகும். மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிபவனாக இருக்கின்றான். ஆயினும் யாரும் குடியிருக்காத உங்களுக்குப் பலன் தரக்கூடிய ஏதாவது பொருள்கள் உள்ள வீடுகளில் நுழைவதில் உங்கள் மீது யாதொரு தவறுமில்லை. நீங்கள் வெளிப்படுத்துபவை மற்றும் மறைத்து வைப்பவை அனைத்தையும் அல்லாஹ் நன்கறிவான்! -24:2729-

**கல்வி, பெண்ணுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த அதிகாரத்தை குடும்ப நிறுவனம் பறிக்கிறது...!**

குடும்ப உறவினர்களே யானாலும் யார்.., யார் முன்னிலையில் சுதந்தரமாக நடமாடலாம் என்பதைக் கூறும்போது..,

"...தங்கள் கணவன்மார்கள், தங்களுடைய தந்தையர்கள், தங்கள் கணவன்மார்களின் தந்தையர், தங்களுடைய மகன்கள், தங்கள் கணவன்மார்களின் மகன்கள், தங்கள் சகோதரர்கள், தங்கள் சகோதரர்களின் மகன்கள், சகோதரிகளின் மகன்கள், தங்களுடன் நெருங்கிப் பழகும் பெண்கள், தங்களுடைய ஆண், பெண் அடிமைகள் மற்றும் தவறான வேட்கைகளில்லாத தம்மை அண்டி வாழுகின்ற ஆண்கள், மேலும், பெண்களின் அந்தரங்க விஷயங்களைப் பற்றி எதுவும் தெரிந்திராத சிறுவர்கள் ஆகிய இவர்கள் முன்னிலையிலன்றி (வேறு எவரிடத்திலும்) தங்களுடைய அழகை அவர்கள் வெளிக்காட்ட வேண்டாம்...!" -24:31 என்கின்றது..!

*அடுத்த இதழில் முடியும்..,இறைநாடின்..!*



VASANTHAM - May 2012 New.indd Sec1:18 5/24/12 10:57:14 AM

அழகிய சிறியவன்

# சுற்றத்து செய்திகள்


















உலக வர்த்தகத் தலைநகராக உருவெடுத்துக் கொண்டிருக்கும் துபை-இல் சர்வதேச அமைதி மாநாடு 2012 வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்தது. பல்வேறு இன-தேசிய-மதங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 150,000-க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இம்மூன்று நாள் மாநாட்டில் டாக்டர்.ஜாகிர் நாயக் உள்ளிட்ட பன்னிரண்டு இஸ்லாமிய அறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.சகோதரத்துவம்,மகளிர் நிலை,ஒன்றே குலம்.. ஒருவனே தேவன் போன்ற பல தலைப்புக்களில் நடைபெற்ற உரைகள் மற்றும் கருத்தரங்குகளுடன் மாற்று மத சகோதர-சகோதரிகள் இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய நிகழ்ச்சியும் நடந்தது.இம்மாநாடு,பல்வகை இனத்தவரை ஒரே குடையின் கீழ் கொணரும் உன்னத மேடையாக இம்மாநாடு திகழ்வதாக பெருமிதப்படுகின்றார் இதனை ஏற்பாடு செய்த உலக அமைதிக்கான முஹம்மத் பின் ரஷீத் அல்-மக்தூம் விருது அறக்கட்டளை அமைப்பின் தலைவர் டாக்டர். ஹமத் அல்-ஷைபானீ அவர்கள்!

-துபை-இலிருந்து அப்துல் காலிக்



போட்டியில் பங்கு பெறுங்கள்! பெறுமதியான பரிசு வெல்லுங்கள்!!

# அறிவுப் போட்டி!

இந்த (மே) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி, பின்வரும் கூற்றுக்களுக்கு விடைகள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமான விடைகளுக்கு அருகில் உள்ள வட்டத்தில் இடுக..!

## வினாக்கள்

1 பாரத்தை இறக்கி வைத்தாலும் இன்னும் சுமந்து கொண்டிருக்கும் ஆளுமை இவளுடையது..!

2 உலக மதங்களில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தலையாய மார்க்கமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் மார்க்கம் இது..!

3 புதிதாக முஸ்லிமல்லாத சகோதரிகளுக்கு மத்தியில் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்வது எப்படி என்பது குறித்த IPC-,ன் கருத்தரங்கை நடத்தியவர் இவர்!

4 இந்த இதழ் முகப்புக் கட்டுரை இது குறித்தது..!

5 வசந்தத்தின் சமீபத்திய வாசகர் தான் என கடிதப் பகுதியில் குறிப்பிட்ட சகோதரரின் பழைய பெயர் இது!

- ○ இஸ்லாம்
- ○ ஜேம்ஸ்
- ○ தாய்
- ○ ஜைனப் ஹஸன் அஷ்ரீ
- ○ ஆரம்பக் கல்வி

## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 08. 2012 10. முடிவுகள் வசந்தம் அக்டோபர் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

## சுயவிவரம்

பெயர் Name

__________

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

தொலைபேசி Cell No.

__________

மின்னஞ்சல் email ID

__________

தேசிய இனம்/நாடு
Nationality

__________

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait

__________



VASANTHAM - May 2012 New.indd Sec1:20 5/24/12 10:57:17 AM

# விளம்பரங்கள் வியாபிக்க..!






குவைத் முழுவதும்
அழகுநயத்தோகையுடன்
வலம் வருகின்றது வசந்தம்,
தங்கள் இதய நந்தவனங்களில்..!
இப்போது,
அதன் பக்கங்களில் உங்கள்
விளம்பரங்கள் வியாபிக்க
அழகு சந்தர்ப்பம்..!

| | Description | Advertisement Rate | 30% Discount for One year | 20% Discount for one Month |
|---|---|---|---|---|
| 1 | Inside Page of Front Cover | KWD 150 | KWD 105 | KWD 120 |
| 2 | Inside Page of Back Cover | KWD 150 | KWD 105 | KWD 120 |
| 3 | Single Page Inside | KWD 100 | KWD 70 | KWD 80 |
| 4 | Two middle pages | KWD 200 | KWD 140 | KWD 160 |
| 5 | Back Cover Page | KWD 200 | KWD 140 | KWD 160 |

**துரித அழைப்புக்கு..!** HOTLINE: 97266683

VASANTHAM - May 2012 New.indd Sec1:21 5/24/12 10:57:18 AM

மே 1: உழைப்பாளர் தினம்

# உழைக்கும் கைகளே..!

ஆண்டவன் உலகத்தின் படைப்பாளி..!
அவன் படைப்பில் நாம் எல்லாம் தொழிலாளி..!!

உழைக்காமல் வாழ்பவனோ கடனாளி..!
உழைத்து வாழத் தெரியாதவன் ஏமாளி..!!

உழுதுண்டு வாழ்பவனோ உழவாளி..!
உழைக்கின்ற அனைவருமே உழைப்பாளி..!!

நற்படைப்பாளி அனைவருமே தொழிலாளி..!
ஆண்டவனே உலகத்தின் முதலாளி..!!



IPC தமிழ்ப் பிரிவு துரித அழைப்புக்கு..! HOTLINE: 97266683

VASANTHAM - May 2012 New.indd Sec1:22 5/24/12 10:57:22 AM